# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.237/2020.
Prosecution witness for P.W. 7.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. செந்தூர். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.02.2025.

All Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது சோட்டையன் தோப்பில் குடியிருந்து கடல் தொழில் செய்து வருகிறேன். இறந்துபோன முருகேசன் என் தம்பி. ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு தசரா திருவிழாவில் என் தம்பி வேடம் போட்டுக் கொண்டு முள்ளக்காடு முத்தையாபுரத்தில் இருந்தபோது ஏற்கனவே ஆஜர் எதிரிகளுக்கும், என் தம்பிக்கும் முன்விரோதம் காரணமாக தகராறு ஏற்பட்டது. என் சித்தப்பா தங்கபாண்டியை ஆஜர் எதிரிகள் கொலை செய்துவிட்டதாக இருந்த முன்விரோதம் காரணமாக என் தம்பி தசராவிற்கு சென்றபோது ஆஜர் எதிரிகளுக்கும், என் தம்பிக்கும் தகராறு ஏற்பட்டு அவர்களுக்குள் மாறி மாறி வெட்டிக் கொண்டார்கள். சம்பவம் கேள்விப்பட்டு நான் செல்வதற்குள் என் தம்பியை மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். அசா1 போலீசில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் பிரேத விசாரணை செய்தபோது நான் உடனிருந்து பிரேதத்தை அடையாளம் காட்டினேன். அப்போது என் தம்பியின் உடல் முழுவதும் காயங்கள் இருந்தது.

## குறுக்கு விசாரணை

சம்பவ இடத்திற்கும், எங்கள் ஊருக்கும் சுமார் 15 கி.மீ இருக்கும். என் தம்பி வேடம் கட்டி சென்றது எனக்கு நேரில் தெரியாது. என் தம்பி ஆயுதம் கொண்டு சென்றிருக்கலாம். அப்போது 1ம் எதிரியிடம் ஆயுதம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. என் சித்தப்பாவை கொலை செய்த வழக்கில் 1ம் எதிரியான மாரிமுத்து என் சித்தப்பா மகளை திருமணம் செய்திருந்தார் என்றால் சரிதான். அதனால் முன்விரோதம் காரணமாக இந்த வழக்கு சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. என் தம்பிதான் 1ம் எதிரியை கொலை செய்வதற்காக வேடம் கட்டி ஆயுதம் எடுத்து வந்தார் என்றால் சரியல்ல. என் தம்பியிடமிருந்து ஆயுதத்தை பொதுமக்கள் பறிக்கும்போது ஆயுதம்பட்டு என் தம்பி இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. இறந்துபோனவர் என் தம்பி என்பதால் எதிரிகளுக்கு பாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.02.03 18:52:49 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.